கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட
ஆள் சேர்ப்பு நிலையம், சேலம் மாவட்டம்.

கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம், சேலம் மண்டலம்
முகவரி
அறை எண்.410, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம், சேலம் – 636 001.

விளம்பர எண்.02/2020 நாள் 10.01.2020.

சேலம் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் கீழ்க்காணும் வகை கூட்டுறவுச் சங்கங்களில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்காக கீழ்க்காணும் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 07.02.2020 பிற்பகல் 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

1) அலுவலக உதவியாளர்

வ. எண்.	கூட்டுறவு நிறுவனத்தின் வகை / பெயர்	காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை	பணியிடத்திற்கான சம்பள விகிதம் (தற்போதுள்ளபடி)
1.	தளவாய்ப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்	1	ரூ.12300–35150
2	ஏத்தாப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்	1	
3	செங்கரடபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்	1	
4	மேட்டூர் கெமிக்கல்ஸ் பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணய சங்கம்	1	ரூ.11000–34700
5	மேட்டூர் மின்திட்ட பொதுப் பணியாளர்கள் கூட்டுறவு சங்கம்	1	ரூ.3300–10000+2000 (பழைய சம்பளப்படி) தர ஊதியம்
	மொத்தம்	5	

காலிப்பணியிடங்களுக்கான வகுப்புவாரி ஒதுக்கீடு

வகுப்பு		அலுவலக உதவியாளர்
பொதுப் பிரிவு	:	2
பிற்படுத்தப்பட்டோர்	:	1
பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்)	:	-
மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர் மரபினர்	:	1
ஆதிதிராவிடர்	:	-
ஆதிதிராவிடர் (அருந்ததியர்)	:	1
பழங்குடியினர்	:	-
மொத்தம்	:	5

குறிப்பு:-

1. மேற்குறிப்பிட்ட காலிப்பணியிடங்களில் பெண்கள், ஆதரவற்ற விதவைகள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் (கண்பார்வையற்றோர் தவிர) ஆகியோருக்கு இட ஒதுக்கீடு விதிகள் நடைமுறையில் உள்ள அரசு ஆணைகளின்படி பின்பற்றப்படும்.
2. அ). மேற்படி சம்பள விகிதம் மற்றும் இதரப் படிகள் மேற்குறிப்பிட்ட கூட்டுறவு நிறுவனத்தின் துணைவிதிகள் மற்றும் பணியாளர் பணிநிலை குறித்த சிறப்புத் துணைவிதிகளுக்குட்பட்டு அமையும்.

   ஆ. தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படும் சம்பந்தப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தின் துணைவிதி மற்றும் சிறப்பு துணைவிதிகளுக்குட்பட்டு பணியாற்ற வேண்டும்.

   இ. நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும்போது கடைபிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் குறித்த விவரங்கள் நேர்முக தேர்விற்கான அழைப்புக் கடிதத்துடன் அனுப்பி வைக்கப்படும்.
3. நியமனத்தின் போது தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் போதுமான அளவு இல்லாத போது பெண்களுக்கான ஒதுக்கீடு எண்ணிக்கையைத் தகுதிவாய்ந்த அதே வகுப்பினைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.
4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சேலம் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 07.02.2020 பிற்பகல் 5.45 மணி வரை. அதற்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. மேற்படி பணியிடங்களுக்கான தெரிவு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய தலைவரிடம் உரிய காரணங்களுடன் செய்யப்பட வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.
6. உடற்தகுதி சான்றிதழ்:-

   மேற்படி பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்கு குறையாத மருத்துவரிடம் பெற்ற உடற்தகுதிச் சான்றிதழினைச் சமர்ப்பிக்க வேண்டும். தகுதி பெற்ற கண் மருத்துவரிடம் பெறப்பட்ட சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய உடல் ஊனம் மேற்படி பதவிகளுக்கான பணியினைச் செய்வதற்கு தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவ குழுமத்திடமிருந்து பெறப்பெற்ற சான்றிதழினையும் சமர்ப்பிக்க வேண்டும்.
7. சேலம் மாவட்டத்தில் வசிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு தெரிவில் முன்னுரிமை அளிக்கப்படும்.

2. தகுதிகள்:

அ. வயது வரம்பு

i) 01.01.2020 அன்று விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும் (அதாவது 01.01.2002 அன்றோ அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்).

ii) விண்ணப்பதாரர் 01.01.2020 அன்று கீழ்க்கண்டவாறு வயது குறித்த தகுதியினை பெற்றிருக்க வேண்டும்.

	விண்ணப்பதாரர் இன வகைகள்		அதிகபட்ச வயது
1.	ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் இவ்வகுப்புகளைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள்.	:	வயது வரம்பு இல்லை.
2.	பிற வகுப்பினர் (OC)	:	30 வயதுக்கு மிகாமல்
3.	அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள்	:	வயது வரம்பு இல்லை.
4.	பிற வகுப்பினைச் (OC) சார்ந்த முன்னாள் இராணுவத்தினர்	:	48 வயதுக்கு மிகாமல்.
5.	பிற வகுப்பினைச் (OC) சார்ந்த மாற்றுத் திறனாளிகள்	:	40 வயதுக்கு மிகாமல்.

ஆ) கல்வித் தகுதி:

1) அலுவலக உதவியாளர்-

அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் படித்து எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

விளக்கம் :- அங்கீகரிக்கப்பட்ட பள்ளி என்பது தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் அல்லது தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்ற அல்லது மாநில கல்வி விதிகளின் கீழ் பள்ளி கல்வித் துறை இயக்குநரால் அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டவை.

A Pass in VIII Standard of a recognized school (i.e) a school maintained by or opened with the sanction of the Government of Tamil Nadu or to which recognition has been accorded by the Director of School Education under the Educational Rules of the State.

தமிழ்மொழித் திறன்

விண்ணப்பதாரர்கள் எட்டாம் வகுப்பில் தமிழ்வழிக் கல்வியிலோ அல்லது தமிழ் மொழியை ஒரு பாடமாகவோ படித்து தேர்ச்சி பெற்று இருப்பதுடன் தமிழ்மொழியில் எழுதப் படிக்க போதுமான திறன் உள்ளவராக இருக்க வேண்டும்.

இ) பொது

- விண்ணப்பதாரர்கள் பிற மாநிலத்தவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் எந்தப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருப்பினும் பிற வகுப்பினராகவே (OC) கருதப்படுவர்.
- 'ஆதரவற்ற விதவை' என்பது அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4,000/-க்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுய தொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார். மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார்.

3. விண்ணப்பக் கட்டணம் மற்றும் செலுத்தும் முறை

அ) விண்ணப்பப் பதிவு மற்றும் நேர்முகத் தேர்வுக்கான கட்டணம் ரூ.150/- ஆகும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், அனைத்துப் பிரிவையும் சார்ந்த மாற்றுத் திறனாளிகள், அனைத்துப் பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு இக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரிடமிருந்து சான்றிதழும், மருத்துவச் சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். ஆதரவற்ற விதவைகள் வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து சான்று பெற்றிருக்க வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் விண்ணப்பக் கட்டணம் ரூ.150/- செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பத்துடன் கட்டணம் செலுத்தப்பட்ட செலுத்துச் சீட்டின் நகல் (Triplicate challan copy) இணைக்கப்பட வேண்டும்.

ஆ) விண்ணப்ப கட்டணம் செலுத்தும் முறை

மேற்படி பணி நியமனத்திற்கான விண்ணப்பப் பதிவுக்கட்டணம் ரூ.150/-ஐ (கட்டண விலக்குக்கு தகுதியுள்ளோர் தவிர ஏனையோர்) சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகளில் மூன்று படிகள் கொண்ட செலுத்துச்சீட்டு (Triplicate Challan) மூலம் செலுத்தி, அதில் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய (DRB Copy) படியினை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒரு முறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி அளிக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் தனித்தனியே கட்டணம் செலுத்தப்பட வேண்டும். கட்டண விலக்கிற்கு அனுமதிக்கப்பட்டவர் தவிர இதர விண்ணப்பதாரர்கள் கட்டணம் செலுத்தி செலுத்துச் சீட்டின் பிரதியினை இணைத்திருக்க வேண்டும். கட்டணம் செலுத்தாமல் விண்ணப்பம் அனுப்பியிருப்பின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

4. தெரிவு முறை:-

அ) மேற்படி காலிப் பணியிடங்கள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், முன்னாள் இராணுவத்தினர் அலுவலகம் ஆகியவற்றின் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் இவ்விளம்பரம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகிய அனைத்திற்கும் நடத்தப்படும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் நிரப்பப்படும். இப்பணியிடங்களுக்கான நபர்கள், நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அரசாணையின் படி இட ஒதுக்கீடு மற்றும் வகுப்புவாரி சுழற்சிக்கு உட்பட்டும், காலிப்பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வில் பெற்ற ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அரசாணைப்படியான இட ஒதுக்கீடு, இன சுழற்சி முறை ஆகியவற்றின் அடிப்படையில் கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுவார்கள்.

விண்ணப்பதாரர் கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் அவரை வேறொரு கூட்டுறவு நிறுவனத்திற்கு மாற்ற இயலாது. அவ்வாறு வேறொரு கூட்டுறவு நிறுவனத்திற்கு மாற்றம் செய்யக் கோரி வரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

ஆ) ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களில் கொடுக்கும் வயது, கல்வித் தகுதி, சமூகப் பிரிவு, சிறப்புத் தகுதிகள் மற்றும் பிற தகுதிகள் அனைத்தையும் சரிபார்த்த பின்னர், அவற்றை பெறத் தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.

இ) மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தேர்வு செய்யப்படும் நபர்களுக்குத் தெரிவு மற்றும் கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு ஆணை (selection and allotment order) மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் வழங்கப்படும். அவர்களுக்கு, ஒதுக்கீடு செய்யப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தின் தகுதிவாய்ந்த அலுவலரால் பணியமர்வு ஆணை (appointment order) வழங்கப்படும்.

ஈ) தெரிவு செய்யப்படும் மாற்றுத் திறனாளிகள், தங்களது குறைபாடு, தாங்கள் தெரிவு செய்யப்படும் பதவிகளுக்குரிய பொறுப்புகளை முழுத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு தடையாக இருக்காது என்பதற்கான சான்றிதழை மாவட்ட மருத்துவக் குழுவிடம் பெற்று சமர்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்குக் கட்டாயமாக வருகை புரியவேண்டும். நேர்முகத் தேர்விற்கு வருகைபுரியாத விண்ணப்பதாரர்கள் மேற்படி பணியிடங்களுக்கு தேர்தெடுக்கப்படமாட்டார்கள்.

5. விண்ணப்பங்கள் விநியோகித்தல்:-

மேற்படி பணி நியமனங்களுக்கான விண்ணப்பப் படிவத்தை கீழ்க்கண்ட அலுவலகங்களில் வேலை நாட்களில், வேலை நேரத்தில் கட்டணமின்றி 13.01.2020 முதல் பெற்றுக் கொள்ளலாம்.

1. சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிட், தலைமையகம், செர்ரி ரோடு, சேலம்
2. சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிட், தலைமையகம், சத்திரம், சேலம்,
3. சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட் பள்ளப்பட்டி, சேலம்.
4. ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட், ஆத்தூர்.

6. விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய ஆவணங்கள்:-

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பிறந்த தேதி, கல்வித்தகுதி, இனம் மற்றும் சிறப்பு ஒதுக்கீடு கோரும் இனங்களுக்கு தேவையான அனைத்து சான்றிதழ்களின் சுய சான்றளிக்கப்பட்ட அல்லது A அல்லது B பிரிவு அரசு அலுவலரால் சான்றிடப்பட்ட நகல்களையே இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும், அசல் சான்றிதழ்களை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பக்கூடாது. சான்றளிக்கப்பட்ட சான்றிதழ் நகல்கள் இணைக்கப்படாமல் அனுப்பப்பட்ட விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும்.

7. நேர்முகத் தேர்வு:-

நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பத்தில் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பப்படும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய சொந்த செலவில் அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும், இது தொடர்பாக எந்த உரிமையும், கோர இயலாது. நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளுவதால் மட்டுமே ஒரு விண்ணப்பதாரர் நியமனத்திற்கு உரிமை கோர தகுதியுடையவராக மாட்டார்.

8. தடையில்லா சான்றிதழ்:-

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே பணியாற்றுபவர்களாக (நிரந்தரமாகவோ, அல்லது தற்காலிகமாகவோ) இருக்கும் பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து தேவையான தடையில்லா சான்றிதழினை நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பெறுதல்:-

1. விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. விண்ணப்பப் படிவங்கள் விண்ணப்பதாரரின் சொந்த கையெழுத்தில் பந்துமுனை பேனா (Ball Point Pen) கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணப்பதாரர் கட்டாயம் கையொப்பம் இட வேண்டும். கையொப்பம் இல்லாமல் பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பப் படிவத்தில் அனைத்து கலங்களும், இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களின் அடிப்படையில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.
4. விண்ணப்பப் படிவத்துடன் பதிவுக் கட்டணத்திற்கான செலுத்துச்சீட்டு தவறாமல் இணைக்கப்பட வேண்டும்.
5. விண்ணப்பதாரர் அவரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்றை விண்ணப்பப் படிவத்திலும், நேர்முகத் தேர்விற்கான அழைப்புக் கடிதத்திலும் ஒட்டி A அல்லது B பிரிவு அரசு அலுவலரின் சான்றொப்பம் பெற்று அனுப்ப வேண்டும். மேலும், சுய முகவரியிட்ட ரூபாய் 27.00க்கான தபால் வில்லை ஒட்டிய 24X40 செ.மீ. உறையினையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
6. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள நேர்முக தேர்விற்கான அழைப்புக் கடிதத்தில் விண்ணப்பதாரரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தினை ஒட்டி A அல்லது B பிரிவு அரசு அலுவலரின் சான்றொப்பம் பெற்றும் விண்ணப்பதாரரின் சுய விபரங்களை நிரப்பி கையொப்பமிட்டும் விண்ணப்பத்துடனேயே அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தில் உள்ள விவரங்களுக்கும் நேர்முகத் தேர்விற்கான அழைப்பு கடிதத்தில் விண்ணப்பதாரர் அளிக்கும் விவரங்களுக்கும் வேறுபாடுகள் மற்றும் திருத்தல்கள் காணப்படின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

10. இதர நிபந்தனைகள்:-

i) நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என ஆள்சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது தெரிவு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் இரத்து செய்யப்படும்.

ii) நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறு நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணி நியமனம் கோர உரிமை கிடையாது.

iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை கடைசி நேர மாறுதலுக்குட்பட்டது.

iv) காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையை இரத்து செய்வதற்கு/ திரும்பப் பெறுவதற்கு/ திருத்துவதற்கு/ கெடு தேதியை நீட்டிப்பதற்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு உரிமையுண்டு.

v) விண்ணப்பதாரர்கள் அவர்களது நலன் கருதி அவர்களது விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்பாக விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை கவனமாக படித்து புரிந்து கொண்டு விண்ணப்பிக்க வேண்டும்.

vi) கூடுதல் விபரங்கள் அல்லது சந்தேகங்களுக்கு 0427-2415158 என்ற தொலைபேசியிலோ அல்லது 9488962055 என்ற தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம், அறை எண் 410, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம் – 1 என்ற முகவரிக்கு 07.02.2020 மாலை 5.45 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்ப வேண்டும். குறிப்பிடப்பட்ட நேரத்திற்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது. ஏற்கப்படாத விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்பட மாட்டாது. மேலும் அஞ்சல் தாமதத்திற்கான காரணங்களுக்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பு ஏற்காது. எனவே விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை மேலே குறிப்பிட்ட முகவரியில் 07.02.2020 அன்று மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு முன்னதாக அஞ்சல் செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைவர்,
கூட்டுறவுச் சங்கங்களுக்கான
மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்,
சேலம் மாவட்டம்.